## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – சிவகங்கை மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான திரு.வெ.வைரவமூர்த்தி, ஊராட்சி செயலாளரின் மனைவி திருமதி.ரா.ஷோபனா இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ–5) துறை**

அரசாணை (4ப) எண்.17

நாள் 12.03.2024
சோபகிருது, மாசி 29
திருவள்ளுவர் ஆண்டு 2055.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ5) துறை, நாள் 13.07.2015.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
3. சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரின் செயல்முறைகள் ந.க.எண்.ப்பி3/ 2764/2021, நாள்: 27.01.2022.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.31370/2022/டி3, நாள்: 25.11.2022.
5. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 08.03.2023.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழடி ஊராட்சி செயலாளராகப் பணிபுரிந்து 23.12.2020 அன்று பணியிடைக்காலமான திரு.வெ.வைரவமூர்த்தி, என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.ரா.ஷோபனா என்பவருக்கு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 01.02.2022 முற்பகல் முதல்

..2

பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், அவரது மனைவி திருமதி.ரா.ஷோபனா கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 18.01.2021 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 22.03.1994 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 26 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. ஆய்வுக்குப்பின், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ரா.ஷோபனா என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தனியரின் பணியினை இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 01.02.2022 பிற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ப.செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்.
திருமதி.ரா.ஷோபனா, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, சிவகங்கை மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூலம் மற்றும் கணக்குகள் துறை ஆணையர், சென்னை-35
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.
நகல்
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்